# தகைசால் தமிழரே! தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் - தோழர் நல்லகண்ணு பிறந்தநாளையொட்டி – முதல்வர் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 27-**

**விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தகைசால் தமிழரே! தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் வலைதளப் பதிவு வருமாறு:-

போராட்டம் தொண்டு பொதுநலன், இதுவே தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களின் நூறாண்டுகால வாழ்க்கைப் பக்கங்களில் நிறைந்திருக்கும் சரிதம்!

எளிமையான வாழ்வுக்குச் சொந்தக்காரர் என்று சொல்வதைவிட, பொதுவுடைமைக் கருத்தியலுக்காகக் கடுமையான வாழ்வை எதிர்கொண்ட தீரர் அவர்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு காணும் வேளையில், செங்குருதி சிந்திப் பாடுபட்ட தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களும் நூற்றாண்டு காண்கிறார்! இயக்கமே உயிர்மூச்சென வாழும் அவரைப் போற்றுவோம்!

தகைசால் தமிழரே, தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது! தங்களது வழிகாட்டுதலில் சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் முன்செல்கிறோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



**அன்புமணி:** தி.மு.க.வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தரத் தயார்!

**யாரு கேட்டா?**



**ஜி.கே.மணி:** பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகத் தயார்!

**விலகிக்கோ!**

### இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு

# அனைத்து மருத்துவ வசதிகளும் அடங்கிய அவசர கால ஊர்திகள்!

## ஜமுனாமரத்தூரில் – மலைவாழ் மக்களுக்கான இருசக்கர அவசர கால ஊர்திச் சேவையை தொடங்கி வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

*திருவண்ணாமலை, டிச.27-*

"இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அனைத்து மருத்துவ வசதிகளும் அடங்கிய இருசக்கர அவசர கால ஊர்திச் சேவையை தொடங்கி வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:



திருவண்ணாமலை மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக புதிய மருத்துவ கட்டிடங்களை திறந்து வைக்கின்ற நிகழ்வு சிறப்பாக இன்றைய தினம் நடைபெறுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மலைக் கிராமங்களில் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ச்சியாக செய்து வருகிறார்கள். தமிழகத்தை பொறுத்த வரையில் ஏறத்தாழ 2200க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்கள் உள்ளன. 1500க்கும் மேற்பட்ட மலை கிராமங்களுக்கு அரசு அலுவலர்களின் சேவை கிடைக்காத நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடைக்கோடி மக்களுக்கும் மருத்துவச் சேவை கிடைக்க வேண்டும் என்ற வகையில், மருத்துவத்தை முழுமையாக கொண்டுச் சேர்க்க வேண்டுமென்று, எல்லா கிராமங்களுக்கும் செல்வதற்கு எங்களை பணித்து இருக்கிறார்கள். அந்த வகையில் நான் 350க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்களுக்கு நான் சென்றிருக்கிறேன்.

மேலும் இன்றையதினம் ஜமுனாமரத்தூரில் உள்ள நம்மியம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் மருத்துவ வசதிகள் குறித்து கேட்டறிந்தேன்.

முதலமைச்சர் அவர்கள் மலைவாழ் மக்களுக்கு 100 சதவீதம் மருத்துவ வசதிகளை ஏற்படுத்திட வேண்டுமென்று அறிவுறுத்திருக்கின்ற காரணத்தினால், பல்வேறு பணிகளை செய்து கொண்டிருக்கின்றோம். மேலும் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அரசின் திட்டங்களை தொடர்ச்சியாக இந்த மாவட்டத்திற்கு கொண்டு வந்து, இம்மாவட்டத்தை தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாற்றி கொண்டிருக்கின்றார்கள். 25 இருசக்கர அவசர கால ஊர்திகள் ரூ. 1.60 கோடி இலட்சம் மதிப்பீட்டில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டு இன்றையதினம் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தை பொறுத்தவரையில் அனைத்து வகையான மருந்துகளையும் உள்ளே வைப்பதற்கும், பிராணவாயு, சாய்ந்து படுத்துக்கொண்டு செல்வதற்கான இருக்கை மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் வாகனம் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற வாகனம் இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த வாகனம் வடிவமைக்கப்பட்டு இந்த கிராமங்களிலிருந்து தான் தொடங்கி வைக்கப்படுகிறது.

ஜமுனாமரத்தூரை பொறுத்தவரையில் 262 கிராமங்கள் இருக்கிறது. மலைக்கிராமங்களை அதிகமாக கொண்டிருக்கின்ற மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் 146 மருத்துவ காலிப்பணியிடங்கள் இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 1021 மருத்துவர்களை புதிதாக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பணி ஆணை வழங்கியதில், திருவண்ணாமலை மாவட்டத்தில் 95 மருத்துவர்கள் பணியில் சேர்க்கப்பட்டார்கள். ஜமுனாமரத்தூரில் மட்டும் காலியாக இருந்த 15 இடங்களில் 14 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. காலிப்பணியிடங்கள் இல்லாத பகுதியாக ஜமுனாமரத்தூர் பகுதி விளங்கி வருகிறது. நம்மியப்பட்டு ஊராட்சியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை அரங்கு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்திற்கு ஐ.நா சபையில் விருது கிடைத்திருக்கிறது. இத்திட்டத்தின் வாயிலாக 2 கோடி பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதனால் தான் உலகின் உயரிய விருதான ஐ.நா விருது தமிழ்நாட்டின் மருத்துவத்துறைக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறது. இதயம் காப்போம் என்ற திட்டத்தின் வாயிலாக, 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள துணை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாரடைப்பால் வருகின்ற நோயாளிகளுக்கு லோடிங் டோஸ் என்ற மருந்து கொடுக்கப்பட்டு அவர்களை காப்பற்றுவதற்காக தொடங்கப்பட்டது. 8713 துணை சுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலைங்களிலும் என மொத்தம் 10 ஆயிரத்து 999 மருத்துவமனைகளில் 3 வகையான மாத்திரைகளை கொண்டு இத்திட்டத்தை செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையில் இதய நோய் கொண்டவர்கள் துணை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சென்று சிகிச்சை பெற்றதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் 13 ஆயிரத்து 270 பயனாளிகள் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெற்று காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். அதேப்போல் ஆரம்ப, துணை சுகாதார நிலையங்களில் பாம்பு உள்ளிட்ட விஷப்பூச்சி கடிகளுக்கு மருந்துகள் கிடையாது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆரம்ப, துணை சுகாதார நிலையங்களில் நாய்கடி மற்றும் பாம்பு கடிகளுக்கான மருந்து 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

அதேப் போல் மலைப்பகுதியில் சிக்கில் செல், தாலசீமியா உள்ளிட்ட நோய் பாதிப்புகளை கண்டறிந்து, அதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகிறது. ஜமுனாமரத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சிக்கில் செல், தாலசீமியா நோய் பாதிப்புகள் கடந்த 2 ஆண்டுகளில் பரிசோதனை செய்யப்பட்டு 10க்கும் மேற்பட்ட நோயாளிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளித்து அவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பாக பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பழங்குடியினர் நலவாழ்வை மேம்படுத்தும் வகையில் மலைவாழ் பகுதிகளில் செயல்பாட்டில் உள்ள நடமாடும் மருத்துவ வாகனங்கள் (MMU)) இரத்த பரிசோதனைகளுக்கான பகுப்பாய்வு கருவிகள் (Semi Auto Analyzer) பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள 20 வாகனங்களில் இந்த கருவி பொருத்தப்பட இருக்கிறது.

மலைவாழ் மக்களுக்கு பிரத்யேகமாக பல்வேறு வசதிகள் தொடங்கப்பட்டு, மகிழ்ச்சியாகவும், வரலாற்றில் மிகச் சிறந்த நிகழ்வாகவும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மேலும் இன்றையதினம் புதிய சுகாதார நிலைய கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மருத்துவத்துறை வரலாற்றில் இன்றைய நிலையில் பாதிப்புக்குள்ளாகி, பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து, புதியதாக கட்டிடங்கள் கட்டும் பணிகள் என இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஏறத்தாழ 1365 கட்டிடங்கள் புதியதாக கட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மட்டும் 29 கட்டிடங்கள் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மருத்துவதுறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து, கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வருவாய்த்துறை சார்பாக 15 பயனாளிகளுக்கு ரூ. 3 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகைக்கான ஆணையினையும், 21 பயனாளிகளுக்கு ரூ. 2 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய குடும்ப அட்டைகளும், திருமண நிதியுதவித்தொகையாக 2 பயனாளிகளுக்கு ரூ. 18 ஆயிரம்; மதிப்பீட்டிலும், 263 பயனாளிகளுக்கு பட்டா மாற்றம், சிறு குறு விவசாய சான்று, வாரிசு சான்றிதழ்கள் மற்றும் சாதி சான்றிதழ்களும், வேளாண்மைத்துறை சார்பாக ரூ. 609912 மானியத்தில் 5 பயனாளிகளுக்கு நுண்ணீர் பாசனத் திட்டம் (சொட்டுநீர் பாசனம்), கோவிலூர், குட்டக்கரை, நம்மியம்பட்டு ஊராட்சி மன்றத்திற்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்களும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக 4 பயனாளிகளுக்கு ரூ. 7 இலட்சத்து 6 ஆயிரத்து 438 மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு தலா ரூ. 6000 என மொத்தம் ரூ. 60 ஆயிரம் மதிப்பீட்டில் நிதியுதவியும், ஊட்டச்சத்து பெட்டகம் 10 பயனாளிகளுக்கு தலா ரூ. 2000 என மொத்தம் ரூ. 20 ஆயிரம், வாழ்வின் முதல் 1000 நாட்கள் நிதியுதவி 10 பயனாளிகளுக்கு தலா ரூ. 1000 என மொத்தம் ரூ.10000 மதிப்பீட்டில் நிதியுதவியும், 10 பயனாளிகளுக்கு தாய் சேய் நலப்பெட்டகம், பள்ளி சிறார் கண்ணொளி திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு கண் கண்ணாடிகளையும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களையும், ஊரக வளாச்சித்துறை சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூ. 27 இலட்சம் மதிப்பீட்டில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (இலவச வீடு வழங்கும் திட்டத்தின்) கீழ் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும், கூட்டுறவுத்துறை சார்பாக 14 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு மகளிர் சுய உதவிக்குழு கடன் ரூ. 21 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிக்கான ஆணைகளையும், சமூக நலத் துறை சார்பாக முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ. 25 ஆயிரத்திற்கான ஆணைகள் என 395 பயனாளிகளுக்கு ரூ. 69 இலட்சத்து ஆயிரத்து 350 மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

முன்னதாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை சார்பாக கிளாம்பாக்கம் மற்றும் தாம்பரம் செல்வதற்கான பேருந்தை ( வந்தவாசி மற்றும் உத்திரமேரூர் வழியாக) கொடியசைத்து பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை மரு. தி.சி.செல்வவிநாயகம், மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட இயக்குநர் இரா.மணி, மாவட்ட சுகாதார அலுவலர் (பொ), திருவண்ணாமலை மரு. த.நி. சத்தீஷ்குமார், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர்

திருமதி பார்வதி சீனிவாசன், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், ஜமுனாமரத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி ஜீவா மூர்த்தி, ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் திருமதி மகேஷ்வரி செல்வம், வட்டார மருத்துவ அலுவலர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை**

பூ.து.ந.க.எண்.பி2 / 2145 / 2024

**இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் - 11, வார்டு - 145ல் உள்ள நெற்குன்றம் மாதா கோயில் தெருவில் புதிய பூங்கா அமைக்கும் பணி (Two Cover System)**

**பணியின் மதிப்பு ரூ.191.17 இலட்சங்கள்**

முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **09.01.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **10.01.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5672 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**


### சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்



## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு! இன்று (27-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!

### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 62அ | கே.மகேஷ் வட்டக் கழக செயலாளர் | கலவை தெரு, சாமி பண்டாரம் சந்திப்பு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை–2 | **ஈரோடு இறைவன்** கழக இலக்கிய அணி இணை செயலாளர் தலைமைக்கழக பேச்சாளர் **கோகுல்** தலைமைக் கழக இளம் பேச்சாளர் |
| 2 | 111அ | எஃப்.பீட்டர் ஜான் வட்டக் கழக செயலாளர் | ரங்கூன் வீதி, பத்தாரி சாலை, ஆயிரம்விளக்கு சந்திப்பு, மாலை முரசு அருகில் | **கடலூர் புகழேந்தி** தேர்தல் பணிக்குழு செயலாளர் தலைமைக்கழக பேச்சாளர் **ராஜராஜேஸ்வரி** தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு/பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



மாமல்லபுரம் நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நகரக் கழக அமைப்பாளர் – நகர கவுன்சிலர், மாமல்லபுரம் மோகன்குமார் விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் ஆரணி மாலா, மாவட்டப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்ககினர். இதில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஆர்.கே.ரமேஷ், தலைமை பொது குழு உறுப்பினர் எம்.செல்வகுமார் மற்றும் நகரக்கழக வட்டக் கழகநிர்வாகிகள், பேரூராட்சிமன்றஉறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிர்அணிநிர்வாகிகள் பெருந் திரளாக கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களால் கொளத்தூர், அகரம், ஜெகநாதன் தெருவில் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் "முதல்வர் படைப்பகத்தை" நேற்று (26.12.2024) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு, அப்படைப்பகத்தின் மூலம் பயன்பெற்று வரும் மாணவ, மாணவியருடன் கலந்துரையாடினார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் பாலமுருகன், மாநகராட்சி மண்டல அலுவலர் முருகன், செயற்பொறியாளர்கள் ராஜன்பாபு, செந்தில்நாதன், உள்ளாட்சி பிரதிநிதி ஐ.சி.எப். முரளிதரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.அமுதா பொன்னிவளவன், நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.யோகபிரியா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.